# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **003/ந/2018**

நாள் : **07/08/2018**

திரு அருள் ஆறுமுகம்,
சென்னை. – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையாளர்,
ஓசூர் நகராட்சி,
ஓசூர். – **எதிர் மனுதாரர்**

சென்னை, எழும்பூர், ருக்குமணி லட்சுமிபதி சாலை, எண்.140-A என்ற முகவரியில் வசிக்கும் திரு அருள் ஆறுமுகம் அவர்களின் 28.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 03/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, எழும்பூர், ருக்குமணி லட்சுமிபதி சாலை, எண்.140-A என்ற முகவரியில் வசிக்கும் திரு அருள் ஆறுமுகம் என்பவர், ஓசூர் நகராட்சியில் தெருவிளக்குகள் அமைக்கும் பணி முழுமையாக முடியாதது குறித்து சமூகத் தணிக்கை மூலம் கண்டறிந்து இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்காணும் நிகழ்வுகளைக் குறிப்பிட்டு முறையீடு செய்துள்ளார் :-

(1) என். டி.ஆர். நகர், 3–வது பிரதான சாலை, முதல் குறுக்குத் தெருவில் இரண்டு மின்விளக்குகள் தனி மின்கம்பி வடத்தால் இணைக்கப்படாதது ;

(2) என். டி.ஆர். நகர், 3–வது பிரதான சாலை, இரண்டாவது மற்றும் மூன்றாவது குறுக்குத் தெருக்களில் மின்விளக்குகள் மின்கம்பி வடத்தால் இணைக்கப்படாமல் சாதாரண மின்கம்பிகளை கொண்டு இணைத்தது ;

(3) உள்வட்ட சாலைகளில் உள்ள மின்விளக்குகள் மின்கம்பி வடத்தால் இணைக்கப்படாதது.

2. முறையீட்டு மனுதாரரிடம் 09.04.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது மேற்குறிப்பிட்ட தகவல்களை உறுதி செய்ததுடன் தற்பொழுது 89 விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டன என்றும், ஆனால் அவைகள் பாதுகாப்பற்ற முறையில் பொருத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார். மேலும், விளக்குகளுக்கு மின்கம்பி வடங்களை பொருத்த ஆணையிடுமாறும் கேட்டுக்கொண்டார். மனுதாரரின் சாட்சியான திரு இளையராஜா என்பவரும் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தையே உறுதி செய்தார்.

3. ஒசூர் நகராட்சி ஆணையர் 13.07.2018 நாளிட்ட கடிதத்தில் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். என்.டி.ஆர். நகர், 3–வது பிரதான சாலை, முதல் குறுக்குத் தெருவில் 2 விளக்குகள் பொருத்தப்படவில்லை என முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்ட விளக்குகள் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மேற்குறிப்பிட்ட நகர் மற்றும் பிரதான சாலையின் இரண்டாவது மற்றும் மூன்றாவது குறுக்குச் சாலையில் உள்ள மின்விளக்குகள் மின்கம்பி வடங்களால் இணைக்கப்பட்டு விட்டன என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், உள்வட்டச் சாலையிலும் தெருவிளக்குகள் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளன என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்டத் தகவல்கள் அடங்கிய 13.07.2018 நாளிட்ட கடிதத்தின் படியும் முறையீட்டு மனுதாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்த குறைபாடுகள் அனைத்தும் ஒசூர் நகராட்சியால் சீர்செய்யப்பட்டு விட்ட நிலையில், இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

21/8/2018
செயலாளர்.
21/8/18

பெறுநர்

1. திரு அருள் ஆறுமுகம்,
   140–A, ருக்குமணி லட்சுமிபதி சாலை,
   எழும்பூர்,
   சென்னை – 600 008.

2. நகராட்சி ஆணையாளர்,
   ஒசூர் நகராட்சி,
   ஒசூர், தர்மபுரி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி